ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2456/ 27 - 2025 සැප්තැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා - 2025.09.30**

2456/27 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

**அம்பலாங்கொடை நகர சபை**

களியாட்ட வரி

(267 ஆவது அதிகாரமான) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் காலி மாவட்டத்தில் அமைந்துள்ள அம்பலாங்கொடை நகர சபையில் 2025, யூலை மாதம் 01 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் 05.01.01.01 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் முன்மொழிவை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புடைய ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (2) ஆவது உப பிரிவின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் தென் மாகாண ஆளுநரான மத்தும கங்கானமலாகே பந்துல ஹரிஸ்சந்திர ஆகிய நான் அனுமதி வழங்குகிறேன் என்பதை இத்தால் தயவாக அறிவிக்கின்றேன்.

**மத்தும கங்கானமலாகே பந்துல ஹரிஸ்சந்திர,**
கௌரவ ஆளுநர்,
தென் மாகாண சபை.

தென் மாகாண ஆளுநர் அலுவலகம்,
2025, செத்தெம்பர் 25.

1A - PG7266 - 07(2025/09)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தீர்மானம்**

(267 ஆவது அதிகாரமான) களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் மூலம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அம்பலாங்கொடை நகர சபை, சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேசத்தினுள் நடாத்தப்படும் அந்தக் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள சிற்சில களியாட்ட நிகழ்வுகளுக்கான கட்டணங்களிடையே, சினிமா திரையரங்குகளுக்காக 10% உம், ஏனைய சகல வித களியாட்ட நிகழ்வுகளுக்காக நுழைவுச் சீட்டின் பெறுமதியில் 12.5% இற்கு ஒத்த தொகையை வரியாக விதித்து அறவிடுதல் வேண்டும் எனவும், இந்த முன்மொழிவு 2025.10.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் எனவும், முன்மொழியப்படுகின்றது. அத்துடன் மேலே விதிக்கப்படும் களியாட்ட வரியை அந்த களியாட்ட நிகழ்வு இடம்பெறும் திகதிக்கு முன்னர் உரிய ஏற்பாட்டாளர் அல்லது ஏற்பாட்டாளர்களால் உரிய முறையில் அம்பலாங்கொடை நகர சபைக்குச் செலுத்துதல் வேண்டும் எனவும், அம்பலாங்கொடை நகர சபை மேலும் முன்மொழிகின்றது.

EOG 09 - 0271

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.